செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஸ்ரீ (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அ௯] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஸ்ரீ ஆனி மீ ௨௫ உ வெள்ளிக்கிழமை (9-7-1971) [இல-கந

## இறைவனது பழமை

'திருநெறிய தமிழ்மணி' புலவர் தா குருசாமிதேசிகர்
[துணைச்செயலர், திருவாலவாய்ச் சைவசித்தாந்தசபை, மதுரை.]

[சைவ சித்தாந்தசபை ஆதரவில் நடைபெற்ற விடுமுறைப் பயிற்சி வகுப்பில் ஆற்றிய விரிவுரையின் சாரம்.]

திருமுறைப் பாடல்கள் கூறுகின்ற உண்மைகள் யாவை? என்று ஆய்ந்தவர் பலரில் முதன்மை வகிப்பவர் அகத்தியர். அவ்வகத்தியப்பெருமான் திருமுறை எட்டு உண்மைகளை உணர்த்துவன என்று முடிவு செய்து சிவாலய முனிவர்க்கு அகத்தியர் தேவாரத் திரட்டுத்தந்தார். இத்தேவாரத் திரட்டில் குருவடிவம், விபூதி, பஞ்சாக்கரம், கோயிற்றிறம், சிவரூபம், திருவடி, அருச்சனை, அடிமை என்று பிரிவு செய்து இருபத்தைந்து பதிகங்களை இதனுள் அடக்கினர்.

கொற்றவன் குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறைக்கடலைக் கடைந்து, பத்துவகையாகப் பிரிவு செய்து, தொண்ணூற்றிற்கும் மேலாகத் தனித் தனிப் பாடல்களாகத்தொகுத்தார். அகத்தியார் பதிகமாகத் தொகுத்தார்; சிவாசாரியர் தனித்தனிப்பாடல்களாகத் தொகுத்தார். இவ்விருவர் தொகுப்பில் நமது உமாபதி சிவாசாரியர் தொகுப்பு முறையே நமது சிந்தனைக்குரியது.

திருமுறைக் கடலில் கூறித்திளைத்த உமாபதி சிவம் திருவருட்பயன் என்ற சாத்திர நூலையருளியிருக்கின்றார். அச்சாத்திர நூல் திருமுறைக் கடலில் கடைந்ததாகும். திருமுறைப் பழத்தின் சாறு போல திருவருட்பயன் விளங்குகிறது. திருமுறை இலக்கியம்; திருவருட்பயன் இலக்கணம்.

திருவருட்பயன் குறள் வெண்பாயாப்பில் அமைந்தது. முதலதிகாரம் பதிமுது நிலை என்பது. இறைவனது பழமையான வரலாறு இவ்வதிகாரத்தில் பேசப்படுகின்றது. அதன் சுருக்கமாவது.

1. இறைவன் அகர உயிர்போல் எங்கும் நிறைந்து நிகரின்றி வணங்குவான். இது சிவபெருமானது தன்னியல்பு ஆகும்.

௨. நிலைபெற்ற (உயிர்கள்) ஆன்மாக்கள் தன் நிலைமை அடைவதற்கு (திருவடித் தாமரையில் நிலைபெற) சிவசத்திகொடுக்கும் அச்சிவசத்தி சிவத்தின் வேறன்று

3. சிவபெருமானின் பெருமை - நுண்மை - பேரருள் - பேற்றின் அருமை- ஆகிய நான்கிற்கும் ஒப்பில்லாத பெருமை திருமுறையால் அறியலாம்.

பெருமை என்பது:- தன் சத்தியைக் கொண்டு ஐந்தொழில் நடத்துவது.

பேரருள் என்பது:- ஆன்மாக்கள் உய்யவேண்டுமென்ற கருணை.

நுண்மை என்பது:- ஐந்தொழிற்கும் தலைமைகொள்ளும் நுண்மை.

பேற்றின் அருமை என்பது: சரியை கிரியை யோகங்களைச் செய்து அவனைப் பெறுகிற அருமை.

(4) சங்கார கர்த்தாவாகிய சிவன் முதன்மையாக விளங்குவது ஏன் எனின் சிவபெருமான் எவற்றையும் ஆக்கி, அளித்து, அடங்கும்படி மலத்தோடு சங்கரித்து, சிவன் உயிர்க்குப் போகாப் புகலாக விளங்கி நிற்பதே காரணமாகும்,

(5) போகாப் புகலாக விளங்குகின்ற பெருமான் அருவமோ உருவமோ என்னில - அவன் ஞானிகட்கு ஞான சொரூபமாகவும், நிட்களமான நாலு திருமேனிக்கும், சகளமான நாலு திருமேனிகட்கும் பிராணனாய் நிற்பன்.

(6) சிவம், தனக்குமேல் ஒருவன் இல்லாதவன்,

(7) வானுடர் காணாத சிவம் நீங்காத பேரறிவாய்த் தன்னை அடைந்த அடியார்களிடத்திலே விட்டுநீங்காதவன்.

(8) சடசித்துகளில் எல்லாம் ஏரியுறு நீர்போல வேறறக் கலந்து நிற்பான். அவனுக்கு ஒப்பு அவனே.

(௯) நண்ணார்க்குநலமிலன்; நண்ணினர்க்கு நல்லவன்; சலமில்லாதவன்; (விருப்பு வெறுப்பு) ஆன்மாவிற்கு உயிர்நலமும் உடல்நலமும் வழங்கும் சங்கரன் என்னும் பெயருடையவன்.

(10) சிவம், பிறப்பிறப்பு நீக்கும் ஒரு மருந்து; அதனால் அச்சிவத்தை நினையுங்கள்; அச்சிவம் என்றும் உளது; உண்டாக்கப்பட்டதன்று; ஐயமில்லாதது; அறிவாய் விட்டுநீங்காதது.

"உன்னுமுளை தையம்
இலதுணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து"

இப்பத்துத் திருவருட்பயன் கருத்துச் சுருக்கத்தை முறைப்படுத்தித் தொகுக்கும் திருமுறைப் பாடல் கீழ்க் கண்டதாகும்.

"தோடுடைய செவியன்
விடை யேறியோர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப்
பொடி பூசியென்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை
நாட் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மா னிவனன்றே.

இத்திருப்பாடல் திருஞானசம்பந்தர் அருளியது. இப் பாடலில் பதிமுது நிலை இலக்கணம் பரவிநிற்பதை முறையாகக் காண்போம்.

1. சிவத்தின் தன்னியல்பு எங்கும் நிறைதல். 'தோடு' என்ற சொல் உமையம்மையை ஒருபாக

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

பூக்கைக் கொண்டரன்
பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர
னாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை
தேடி யலமந்து
காக்கைக் கேயிரை
யாகிக் கழிவரே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## சைவசித்தாந்த வகுப்பு

சைவ சித்தாந்தக் கல்வி விருத்தியாவதற்கு பறளையம்பதி விநாயகர் துணைக்கொண்டு, சுப்பிரமணியப் பெருமான் அருள் பாலித்திருப்பதால், கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிச் செய்த கந்தபுராண யுத்தகாண்ட வெளியீட்டுவிழா நடந்த தெய்வீக அரசமரத்தின் கீழ் 2-7-71 வெள்ளிக்கிழமை தொடக்கம் பலர்சேர்ந்து சித்தாந்த சாத்திரத்தைக் கற்கின்றார்களென சுழிபுரம் சைவ சித்தாந்த சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றனர் இச்சங்கம், ஒரு சைவசித்தாந்த வித்தியாலயத்தைத் தொடர்ந்து நிறுவ உத்தேசித்துள்ளது.

## திருப்பணிக்கு உதவுக

"திருக்கேதீஸ்வரன் கோவில் திருப்பணிக்கு உதவிசெய்ய வேண்டியது சைவப் பெருமக்கள் கடனாகும். 27-8-71 காலை ஆலயத்துக்கு அத்திபாரம் இடுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணியில் ஈடுபட சைவ மக்களைத் திருப்பணிச் சபை அழைக்கின்றது"

மேற்கண்ட ஒரு வேண்டுகோளைத் திருக்கேதீஸ்வர ஆலயச் சபைச் செயலாளர் திரு எஸ். கந்தையா அவர்கள் யாழ்ப்பாணக் கிளைக்கு விடுத்தார்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையின் யாழ்ப்பாணக் கிளைக் கூட்டம் அதன் தலைவர் திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் சென்ற புதன்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

திருப்பணிக்குப் பொருள் சேர்க்குமுகமாகப் பன்னிரண்டு காரியாதிகாரி பிரிவுகளுக்குப் உப சபைகள் நியமிக்கப்பட்டன. இந்தச் சபைகள் குறிப்பிட்ட ஒவ்வொரு இடத்திலும் பிரசாரக் கூட்டங்களை நடாத்திப் பொருள் சேர்ப்பதெனமுடிவு செய்யப்பட்டது.

29-7-71 வியாழக்கிழமை திருக்கேதீஸ்வர ஆலய அத்திபாரத் திருநாள் ஆகக் கொண்டாடுமாறு பாடசாலை அதிபர்களையும், தலைமையாசிரியர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் கேட்பதெனவும் முடிவு செய்யப்பட்டது

நிதி சேகரித்தல் பற்றி திருவாளர்கள் ச. அம்பிகைபாகன், இ. சச்சிதானந்தம், [illegible], அ. பஞ்சாட்சரம் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

## தம்பிரான்சுவாமிகள்

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தமது தமிழ்நாட்டு தலயாத்திரையை முடித்துக்கொண்டு (நேற்று) 8-7-71 வியாழன் மாலை ஈழம் திரும்பியுள்ளார்கள். ஆங்கு பலவிடங்களிலும் தம்பிரான்சுவாமிகளின் இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. (ந நி)

தம்பிரான் சுவாமிகள் அருளாணையின்கீழ்

## தேவாரப் பாடசாலை நிறுவப்பெறும்

யாழ்நகரிலுள்ள - இராமேஸ்வரம் சொத்துக்கள் பரிபாலனம் நல்லை ஆதீன கர்த்தரிடம் ஒப்படைக்கப்பெற்றுள்ளது

[இராமேஸ்வரம் தேவஸ்தான நிருவாகி அவர்கள் நல்லூர்-மதுரைத் திருஞானசம்பந்தர்ஆதீனத்தலைவருக்கு எழுதியகடிதம்]

பார்வையில் காணும் கடிதம் கிடைக்கப்பெற்று பார்த்துக்கொண்டோம். யாழ்ப்பாணத்திலுள்ள சொத்துக்களைப் பராமரிக்கவும், அதன் வருமானங்களை வசூல்செய்யவும், முன்பாக்கிகளை வசூலிக்கவும், இதர நிர்வாகங்களைக் கவனித்து வரவும் அதற்காக ஒரு குழு அமைப்பதற்கும் அக்குழுவின் மேற்பார்வையில் ஒரு தேவாரப் பாடசாலை இயங்கச் செய்யவும், அப் பாடசாலைக்குரிய செலவையும் சொத்துக்களை நிர்வாகிப்பதனால் ஏற்படும் செலவையும் யாழ்ப்பாணத்தில் வசூலாகும் இந்தத் தேவஸ்தானத்தின் தொகையைக் கொண்டு செய்யவும், இந்தத் தேவஸ்தானம் அறங்காவலர் குழுக்கூட்டம் 4-6-71ல் நடைபெற்றதில் பூரண அதிகாரம் தங்கட்கு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றேன்.

இராமேஸ்வரம்தேவஸ்தானம்,
இராமேஸ்வரம். 8-6-71

S. R, முனிசாமி (ஒப்பம்)
நிர்வாக அதிகாரி,

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஹு ஆனி மீ உடு-உ வெள்ளிக்கிழமை [1971]

# விடுமுறை நாளில் மாற்றம்

வருகிற ஆகஸ்டு மாதந் தொடக்கம் வார இறுதியில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் போயா தினத்திற்குப் பதிலாக ஓய்வு நாளாக்குவதற்கு ஒரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இச் சட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் பூரணை நாள் ஓய்வு நாளாகும். இச் சட்டத்தை எல்லாக் கட்சியினரும் ஆதரிப்பார்களென எதிர் பார்க்கப்படுகின்றது. நாட்டில் பௌத்த மதத் தலைவர்கள், பிரபல பௌத்த சங்கங்கள் உட்பட எல்லா மதத்தலைவர்களும் இவ்வித மாற்றத்தைப் பூரண திருப்தியுடன் வரவேற்கின்றார்கள். போயா விடுமுறைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு அதன் நோக்கங்கள் கை கூடவில்லை. உலக நாடுகளுடன் நமது நாடு நடத்துகின்ற வியாபாரமுயற்சிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஒவ்வொரு வாரமும் நமது நாட்டுக்குப் போயா நாட்கள் விடுமுறை நாட்களாகும். உலக நாடுகளுக்குச் சனி ஞாயிறு விடுதலை நாட்களாகும். ஆகக் கிழமையில் நான்கு நாட்களில் நாடு நடத்தும் வியாபார முயற்சிகள் சீர் குலைந்தன. இதனால் நாட்டின் வளம் குன்ற ஏதுவானது.

மக்களுக்கு நாட்களை அறிந்துகொள்ள கஷ்டமாக விருக்கிறது. ஒருவன் காலையில் எழுந்தவுடன் இன்று என்ன நாள் என்பதையறிய அவன் பஞ்சாங்கத்தையோ அல்லது நாட்காட்டியினது உதவியையோ நாட வேண்டிய நிலைமையிருக்கின்றது. இக் கஷ்டத்தைப் போயா நாட்களை விடுதலை நாளாகச் சட்டம் உருவாக்கியவர்களே ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.

போயா நாள் விடுமுறையினால் போயா நாட்களில் மக்கள் சமய வாழ்வை மேற்கொள்வார்கள் என்பதே அச் சட்டத்தை நிறைவேற்றியவர்களின் நோக்கம். அந் நோக்கம் கை கூடவில்லையென்பதினால் பழையபடி சனி ஞாயிற்றுக்கிழமைகளை விடுதலை நாட்களாக்க அரசாங்கந் தீர்மானித்துள்ளது.

இம் மாற்றத்தினால் நாட்டில் தொழிலபிவிருத்தி உண்டாகும். மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கால மயக்கம் நீங்கும். முதல்நாள் இரண்டாம் நாள் என மாறி மாறி வரும் நாட்களுக்கு இட்ட பெயர்கள் நீக்கப்பட்டு இனிமேல் பழைமையானதும உலகநாடுகள் எல்லாவற்றாலும் கணிக்கப்படுகின்ற ஞாயிறு, திங்கள், செவ்வாய், என்ற நாட் பெயர்கள் நடைமுறைக்கு வரும். அரசாங்கம் இவ் விதமான ஒழுங்கைச்செய்து உதவுகின்றமையை நாங்கள் பாராட்டுதல் வேண்டும்.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி வாசி மட அறக்கட்டளைகள்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள், சிதம்பரம் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு ஒவ்வொரு தமிழ்ஆண்டிலும் மிகவும் அதிகப்படியான நஜன்பூஜை நடத்திவரும் தில்லைவாழ் அந்தணருக்கு (தீக்ஷிதர்) வைகாசி அமரபக்ஷம் திருதியை அன்று நடைபெறும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவநாள் அன்று ரூபாய் 1000/- (ஆயிரம்) பரிசு வழங்குவதற்கு ரூபாய் 14 ஆயிரம் ஒதுக்கி "ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் தில்லைவாழ் அந்தணர் நிதி" என்று புதிய அறக்கட்டளையை நிறுவியுள்ளார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி வாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் சிதம்பர தலத்திற்கு மட்டிலும் இதற்கு முன்னர் 39 அறகட்டளைகள் நிறுவி ரூபாய் ஏழு லட்சத்துக்கு மேல் நிதிகள் வழங்கி யிருப்பது குறிப்பிடத் தககதாகும்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்திதம்பிரான் சுவாமிகள் அருளாட்சியை ஏற்றதுமுதல் இதுவரை திருக்கேதாரம் முதல் கோளநாடு வரையும் (பாரத புண்ணிய பூமியில்) 1 கோடி ரூபாய்க்குமேல் ஆங்காங்கு நிதிகள் ஒதுக்கி ஏராளமான அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்தொகையான அறங்கள் திருமுறை வளர்ச்சிக்கும். தேவாரம், திருவாசகம், திருக்குறள் சிலாசனங்கள், அன்னம் பாலிப்பு; கல்வி அபிவிருத்தி சைவசித்தாந்த சாத்திரவளர்ச்சி "சிவ சிவ" ஒளிவளர் விளக்கு; வைத்திய வசதி இவைகளுக்காகவே நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

சிதம்பரம் 'சிவகங்கை''ச் கரை சுவர்களில் திருவாசகம் முழுதும்; மதுரைப் "பொற்றாமரை" கரை சுவர்களில் திருக்குறள் முழுதும் சிலாசானம் செய்து வைத்திருக்கின்றார்கள். மேலும் பல சிவாலயங்களில் தேவாரப் பதிகங்களையும் சிலாசாசனங்கள் செய்திருக்கின்றார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)

## அணிந்துரை அரங்கம்

யாழ். நாயன்மார்கட்டு
ஸ்ரீ இராஜ ராசேஸ்வரி அம்பாள்
(பேய்ச்சியம்மன்) ஆலய
மகா கும்பாபிடேக மலர்

ஆசிரியர் :
திரு. க. சொக்கலிங்கம் பீ. ஏ.
"சொக்கன்" அவர்கள்

வெளியிடுவோர் :
யாழ். சைவ சமய அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு.

விலை: ரூபா 2-00.

பெறுமிடம்:
ஸ்ரீ இராஜ ராசேஸ்வரியம்பாள் தேவஸ்தானப் பொருளாளர், நாயன்மார்கட்டு.

இம் மலர் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் (பேய்ச்சியம்மன்) ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்ச்சியை முன்னிட்டு யாழ் நா. சை. ச. அ. கழகத்தினரால் வெளியிடப் பெற்றது.

மலரின் முகப்பில் கோயிலின் புது கற்பக்கிரகத்தினதும அம்பாளின் திருவுருவமும் அழகாக அமைந்திருக்கின்றது. கோயிலின் வரலாறு ஷெ கழகத்தலைவரால் எழுதப்பெற்றுள்ளது கோயில் வரலாறும, அம்பாளின் தத்துவங்களும் விளக்கப்படுகின்ற கட்டுரைகள் மலரில் காணப்படுகின்றன. அம்பாளுக்கு மக்கள் முதலிட்ட பெயர் பேய்ச்சியம்மன். 1928 ஆம் ஆண்டளவில் கோயிலை ஊர்ப் பொதுவாக்கிய காலத்தில் நாயன்மார்கட்டு பிரபல ஆயுர்வேத வைத்திய பூபதி திரு. வெ. சிவசுப்பிரமணியம் அவர்களும், நல்லூர் திரு. த. கைலாயபிள்ளை அவர்களும் கூறிய கருத்தை அநுசரித்து அம்பாளின் திருநாமம் இராஜ ராஜேஸ்வரியென மாற்றப் பட்டதெனினும் அடியார்கள் அம்மையின் திருப்பெயரை பேய்ச்சியம்மன் எனவும் இன்றும் வழங்கி வருகின்றனர்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் "ஆலய தேவி சேவை' என்ற தமது கட்டுரையில் தேவி ஆன்மாக்களுக்குப் பேயொன்றுந் தன்மையை அளிப்பதினால் அப் பெயர் பொருந்துமெனச் சான்று காட்டுகின்றனர்.

தேவிபெயரில் வித்துவான் க. கி. நடராஜன், பி. ஓ. எல். 'அருட்கவி' சீ விநாசித்தம்பி யாழ்ப்பாணம் ந வீரமணி ஐயர், பண்டிதர் க. இராமச்சந்திரன், நாயன்மார்கட்டு வெ. சிவசம்பு முதலியவர்கள் சொற் சுவை பொருட்சுவை பொருந்திய செய்யுட்களை உதவியுள்ளனர். கட்டுரைகளும் சிறந்த ஞானக் கருத்துக்களுடன் தேவியின் பராக்கிரமத்தை அழகாகக் காட்டுகின்றன.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஸ்ரீமதி இரததினம் நவரத்தினம் எம். ஏ. எம். லிற், வியாகரண உபாத்தியாயர் தி. கி சீதாராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், சைவப் பேரறிஞர் மு. ஞானப்பிரகாசம், திரு. சகணேசன், திரு. நா. முருகவேல், எம். ஏ. எம். ஓ. எல். திரு. சி. பரநிருபசிங்கம், இரசிகமணி கனக. செந்திநாதன், கலாநிதி க. கைலாசபதி எம். ஏ. போன்ற பெரியார்கள் கட்டுரைகளை வழங்கியுள்ளார்கள்.

தொடக்கம் முதல் இறுதி வரை படிப்பவர்களுக்கு உபயோகமான பிரசுரம இதழாசிரியர் விஷயதானஞ் செய்த ஒவ்வொரு வரையும சிறப்பான சுவைமிக்க செய்யுட்கள் மூலம் அறிமுகஞ்செய்திருக்கின்றமையும் இதழைச் சிறப்பிக்கின்றது. ஒவ்வொரு சைவனும் இவ்விதழைப் படிப்பதனால் தேவியின் பராக்கிரமத்தையுணர்ந்து தேவிக்கன்பராவார்களென்பது திண்ணம் இவ்வழகான பயனுள்ள விதழை சுருங்கியகாலத்தில் பிரசுரஞ் செய்த இத[illegible]ரியரைப் போற்றுகின்[illegible]

## இறைவனது பழமை

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

முடைத்தாம் தன்மையைப் புலப்படுத்தி ஓங்காரச் சொல்லாகிய பிரணவ அகரத்தைக் குறிப்பாகக் காட்டினர் 'தோடுடைய செவியன்' என்ற தொடர் எங்குந்நிறைந்து நிகரின்றி விளங்குவதைப் புலப்படுத்துகின்றது.

2. சிவசத்தி சிவத்தின் வேறன்று என்பதை பிரமைக்கு 'அருள் செய்த' பான்மை காட்டிற்று.

3. 'காடுடைய சுடலைப் பொடி பூசுதல்' ஒப்பின்மையைக் காட்டிச் சிவபெருமானின் ஐந்தொழில் தலைமை காட்டிற்று.

4. சிவம் உயிர்கட்குப் போகாப் புகல் என்பதை 'ஏடுடையமலரான் முனை நாள் பணிந்தேத்'திய வரலாறு சான்றாக நிற்கிறது.

5. 'பெம்மான் இவன்' எனச் சுட்டப்பட்டது ஞான சொரூப நிலை.

6. 'காடுடைய சுடலைப் பொடி பூசிய தன்மை' தனக்குமேல் ஒருவன் இல்லாத தன்மையை அறிவிப்பது.

7. 'உள்ளங்கவர் கள்வன்' என்ற தொடர் அடியவரை விட்டு நீங்காதவன் என்பதை அறிவித்தது.

8. 'பீடுடைய பிரமாபுர மேவியபெம்மான்' என்னுந் தொடர் எல்லாவுலகங்களிலும் எரியுறு நீர்போலக் கலந்து நிற்கும் பான்மையை அறிவிப்பது.

9. 'தூவெண்மதி சூடி' என்னுந் தொடர் சிவம் 'சலமிலாதவன்' என்பதை அறிவிப்பது

10. 'என்னுள்ளங்கவர் கள்வன் இவனன்றே என்ற தொடர் – நன்மருந்து நல்குபவன் இவன் என்பதைக் காட்டிற்று. அச்சிவன் விடையேறி உணர்வாய் விளங்குகின்றான்; எனச் சுட்டுகிறது.

திருத்தொண்டர் புராணம் தந்த சேக்கிழார்பெருமான் 'தோடுடைய செவி'ப்பதிகத்தை 'எழுதுமறை' எனப்போற்றுவார். சம்பந்தர் தன் பாடல் பரமனிடம் செலுத்தும் முறையில் செவியைச் சிறப்பித்தார் என்பர். இப்பாடல் 'மெய்மைமொழி' என்றும், சிவபெருமானின் அடையாளங்களுடன் விளங்கும் பதிகம் என்றும் சேக்கிழார் அருளுவார்.

'செம்மைபெற' எடுத்த திருப்பதிகம் 'தோடுடைய' என்ற பாடல் என்பர் சேக்கிழார் 'எல்லையிலா மறை முதன் மெய்யுடன் எடுத்த' இப்பாடல் 'உரை சிறந்து' விளங்குவதைத் தொண்டர் சீர்பரவுவார் உணர்ந்து உரையும் விளக்கித் தருவார்.

ஞானசம்பந்தர் ஞானக் கண்ணிற் சிந்தை நாடி இறைவனைக் 'கள்வன்' என்றார். கள்வர் தொழில் கவர்தல். உள்ளுதலால் உள்ளம எனப்பட்டது. உள்ளம் உயிர் வாழ்வின் நிலைக்களன். இவ்வுள்ளம் மனிதர்க்கே உரியது. அவ்வுள்ளம் ஒரேவழி இறை உணர்வால் கவரப்படாது கள்ளப் புலனைந்தால் கலக்குறும், கலக்குறும் உள்ளம் பாழுடைவதால், சிவத்தால் கவரப்படுவதில்லை; நண்ணார்க்கு நலமிலன் ஆகின்றோம். 'உடையார்' ஒருவரையே வழிப்பறிக் கள்வரும் ஆறலைப்பர்; ஒன்றுமிலாரை ஓட்டி விடுவர், உள்ளம் உடையவர்கள் இறையருளால் கவரப்பட வேண்டும் என்ற மெய்ம்மையினை 'உள்ளங்கவர் கள்வன்' காட்டப்படுகின்றான்.

இத் தோடுடைய செவியன் திருப்பாடல் பதிமுது நிலையைப் பரக்கக் காட்டியதை முன்பு இணைத்தும் பொருத்தியுங் கண்டோம். பீடுடைய இப்பதிகம் ஆன்மாக்கட்கு கடவுள் நிலையை உணர்த்துகின்றது. இக் கடவுள் மூர்த்தி தலம் தீர்த்தமாக நின்று அருள் செய்வார். அதனைற்றான் சீர்காழித் தலத்தைப் 'பீடுடைய பிரமாபுரம் என்றார்.

வானோர் காணாத மன்னர் நம் சிவன். அடியவர்க்கு நீங்காத பேரறிவாக நின்று விட்டு நீங்காது விளங்குவான். இக் கருத்திற்கு மேல் இன்னும் பல சிந்தனைகளைத் தூண்டும் வளம் பொருந்திய இப் பாட்டை நாம் முறையாக ஓதி ஒரு நெறிய மனங் கொள்வோமாக!

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

ஷெ கல்லூரியினது வருடாந்த இல்லப் போட்டி 13—7—71 செவ்வாய்க்கிழமை பீற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் ஷெ கல்லூரியினது முன்னைநாள் அதிபர் திரு சி. சபாரத்தினமும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றுள்ளார்கள்

## அறுபதாண்டு சாந்தி

நெல்வேலி உயர்திரு. மகாராஜபிள்ளை அவர்கள் புதல்வர் திரு. சுந்தரம்பிள்ளை அவர்களின் அறுபது ஆண்டு நிறைவு விழா மிக விமரிசையாக 28-6-71 சோமவாரததிலன்று சிறப்பாக நடைபெற்றது. பிரமஸ்ரீ கா. மகேஸ்வரக குருக்கள் அவர்கள் நன்கு நடத்தி வைத்தார்கள். சுற்றமித்திரர் ஐந்நூற்றுக்கு மேல் சமுகங்கொடுத்து ஆசீர்வதித்தனர். வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் வாழ்த்துக் கூறி ஆசீர்வதித்தனர் சைவபரிபாலன சபைக்கும் 5 ரூபா அளிக்கப்பட்டது. தம்பதிகள் நீடூழி வாழ்க.

# கந்தபுராண வாச்சியார்த்த ஆராய்ச்சி

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்

முன் வளர்ச்சி —3

## தத்துவத் தொனிப் பொருள் விளக்கம்

பிரகிருதிமாயா புவனத்தார் மும் மலமுடையர் என்னும் இயல்பினால், சூரபன்மனும் தம்பியருமாகிய மூவரும் ஆணவாதி மும் மலங்கள் எனவும், அவர் பிறந்து வாழ்ந்த செயல் ஆன்மா மனிதவுடலொடு மருவிநின்ற காலத்து அதன்கண் மும்மலங்களும் விளக்கமுற்றுச் சேட்டித்து நின்ற காலம் எனவும், இந்திரன் ஆன்மா எனவும், பானுகோபன் முதலிய புதல்வர் ஆணவத்தின் மயக்கம் முதலிய குணங்கள் எனவும், சயந்தன் ஆன்ம போதம் ஆற்றல் இச்சை ஆதியவற்றுள் ஒன்று எனவும், சாமான்னிய அசுரரும். சாமான்யதேவரும் முறையே மலங்களினதும் ஆன்மாவினதும சாமான்ய துர்க்குணங்கள் நற்குணங்கள் எனவும், பானுகோபன் சயந்தனை தனது நகரத்திற்கொண்டுவந்து சிறை செய்தது. ஆணவத்தின் அகங்காரம் அல்லது மயக்கம் ஆன்மபோதத்தை அல்லது ஆற்றலை வியவகரிக்க விடாது தன்னுள் அடக்கி வைத்துக்கொண்ட செயல் எனவும், மீன் சுமப்பித்தது ஆன்மாவின் நற்குணங்களை மலத்தின் இழிகுணங்களில் அழுந்தி நிற்கச் செய்தது எனவும் இவ்வாறே சூராதியர் இந்திராதியரை வருத்திய செயல் மேற்போந்தவாறு மும்மலங்களும அவற்றின் குணங்களும் பசுவையும் அதன் இயல்பையும் நன்னெறியில் வியவகரித்து இன்புறவிடாது, தமதுமயக்கம், ஆற்றல்களுளடக்கி வருந்த வைத்ததெனவும். இந்திரன் இடர்சகியாது ஒளித்திருந்து அசுரரை அழித்துத் தம்மைப் பரிபாலிக்க வேண்டித் தவஞ் செய்து நின்றது, ஆன்மா மலவாசனை சகியாது புறச் சார்புகள் விடுத்து அகமுகமாம் நின்று மலபந்த மொழித்துத் தன்னை இறைவனொடு சேர்த்து அழியா இன்பத்தமர்த்த வேண்டி சிவத்தை தியானித்து நின்றதெனவும், சிவபிரான் தவத்திற்கிரங்கி இரட்சிப்போம என அருளி நெடுங்காலம் குமரனைத் தந்து போர்க்களத்துக்கு அனுப்பியது, சிவம் ஆன்மாவின் தியான பூசனைகளை உகந்து அதனை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு பரிபாக காலத்தை நோக்கியிருந்து, சகல நிற்பக்குவரை படாக்கையிடமாய் மானுடக் குருமூர்த்தம் தாங்கி ஆட்கொள்ளும் முறைமை பற்றி மானுடச் சட்டைசாத்தி பரமாசரிய வடிவங் கொண்டு, மார்ச் சாரசமபந்தமாம் ஆன்மாவை நாடி வந்ததெனவும், சிங்கனை வேலாலழியாது குவிசத்தாலழித்தது, அவன் வெண்ணிற முடையவன், பலதலைகளைக் கொண்டவன் என்பது முதலாயின கன்மம் மற்றைய மலங்கள் ஞானத்தால் அழிக்கப்படுவன போல அழியாது தான் நேரே ஞானத்திற்கு ஏதுவாய் நிற்றல், பல சாகைகளைக் கொண்டு நிற்றல் முதலியவற்றை விளக்கு மியல்பெனவும், இறைவன் எஞ்சிய அசுரரையு மழித்துச் சூரனைத் தனிமையாக்கியது ஞானாசாரியர் ஆன்மாவை தத்துவ சங்காரஞ் செய்து, அத்துவசுத்திபண்ணி, பின்னர் உற்பவங்களை நிவிர்த்தியாக்கி, சம்சார பந்தத்தில் உவர்ப்பை உளதாக்கி ஆன்மாவுக்கு மோக்ஷத்தில் உன்முகம் செய்தலாகிய நிவிர்த்திகலையின் கிருத்தியம் பிரதிட்டாகலையின் கிருத்தியம் முதலிய நிர்வாணதீக்ஷை செய்ததெனவும், "நம்பெரு வடிவங்கொள்வம் நன்று கண்டிடுதி" எனக்கூறித் திருவருள் பாலித்தது. ஆன்மாவினிடத்து திருவருளைப் பதியச் செய்து சிவபோதத்தைக்கெடுத்துச் சிவபோதத்தை மேலிடச் செய்து, சிவச் செயலைச் சிவச்செயலாககி ஆகாமியத்தை ஏறவொட்டாது தடுத்ததெனவும், விஸ்வரூபத்தை அவனுக்கு காட்டியது அனாதியாயுள்ள மலவாதனை மீளவும் எழுந்து தாக்காமைப் பொருட்டுச் சிவோகம் பாவனை செய்வித்துச் சிவத்துவத்தை விளக்கிய செயல் எனவும், பின்னர் விஸ்வரூபத்தை மறைத்து மயங்க வைத்து அவனை வேற்படையாற் சங்காரஞ்செய்து அவன் பறவைகளாகி மீண்டும் போர்க்கெழ அருளுக்கம் செய்து அவனை யூர்தியாகக் கொண்டது சிவத்துவ விளக்கம் மறையும்படி ஆணவம் மீளவும் முளைக்க ஞானாசாரியார் பரஞானத்தை ஆன்மாவிடத் திலுதிக்கச் செய்து ஆணவ முளைப்பு அறவே யொழியும்படி சட்சு தீட்சை செய்து ஞானக்கினியாற் சஞ்சிதகன்மத்தை தகித்து, மானச தீட்சை யாதியவும் செய்து, ஆன்மாவைச் சிவத்துடன் கலக்கப்பண்ணிச் சிவமாந்தன்மையாக்கியது எனவும் தத்துவப் பொருள் தோன்றுமாறு தொனிப் பொருள் போந்தவாறு அறிக.

இதனைச் சிறப்பு வகையில் ஆராய்ச்சி செய்து எழுது தற்குச் சந்தர்ப்பம் வாயாமையால், பொது வகையில் எழுதப்பட்டது. ஆதலின் முரணாயிருப்பனவும், வேறு இயைபுடையனவாய் இருப்பனவும்காணப்படின் அன்பர்கள் திருத்தி அமைத்தும் கொள்ளலாம். சரித்திரவியைபினால் இறுதியில் அவனை ஊர்தியாகக் கொண்டனரெனப் பதமுத்தியளித்ததே குறிக்கப்பட்டதெனினும், குருமூர்த்தம் கொண்டெழுந்தருளல் பலவகைத் தீட்சைகள் உபதேசங்கள் புரிதல் சீவன் முத்தனுக்கே யியையுமாகலின் தொனிப்பொருளில் பரமுத்தி எனக் கொள்ளப்பட்டது. (வளரும்)

---

### தமிழ்நாடு [நெல்லை] சங்கரன் கோவில் சைவசித்தாந்த சபை


மேற்படி சபையினது 19வது ஆண்டு நிறைவு விழா 2. 3, 4-7-71 ஆம் தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது

முதலாம் நாள் சைவமாணவர் அரங்குக்கு சிவஸ்ரீ பா. சுப்பிரமணிய பட்டர் அவர்களும், இரண்டாம் நாளுக்கு ஸ்ரீ M C பழனியாண்டிச் செட்டியார் அவர்களும், மூன்றம் நாளுக்கு ந. கு. சு. இராஜகோபால் அவர்களும் தலைமை வகித்தார்கள்.

தவத்திரு. சுந்தர சுவாமிகள் அவர்கள் இரு தினங்களில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

---

### அத்திபார நன்நாள்



பக்தர்: "வருகிற 29-ஆம் தேதி வியாழக்கிழமையை - திருசகேதீச்சர ஆலய அத்திபாரத் திருநாளாகக் கொண்டாடும்படி பாடசாலை அதிபர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர், மாணவர் ஆகியோரைக்கேட்பதென்று இத்திருப்பணியின்யாழ்ப்பாணக் கிளைச் சபையினர் தீர்மானித்திருக்கிறார்களாம் அம்மான்!

சித்தர்: "மகிழ்ச்சியான சேதி பாருங்க; அன்றைய தினம் ஒவ்வொரு சைவ மகனும் - மகளும் இத்திருப்பணிக்கு உதவ முன்வரக்கூடிய ஒரு எழுச்சியை ஊட்டுதற்கு இது உதவும்பாருங்க!

" நாயன்மார் - நாதன்"

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

இல: M B 11521 D. C. J.

அம்பலவாணர் கைம்பெண் காமாட்சி, காரைதீவு மேற்கு — வழககாளி

எதிராக

அம்பலவாணர் வேலுப்பிள்ளை பலுகாடு, காரைதீவு மேற்கு, —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B ம் 11521 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம்௵ ஆவணி மீ 14ம் திகதி (14—8—71) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 1245/-ம், 2—3—70 தொடக்கம் 26—10—70 வரைக்கும் ரூபா 750/-க்கு 8வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 286-50

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு 'வியாவில்' (Viyavil) செ. பர. 10, பத்து எல்லை கிழக்கு சின்னத்தம்பி குமாரசாமியின் ஆதனம், வடக்கு நடராசா பெண் செல்லம்மாவின் ஆதனம் மேற்கு சிவசப்பு கைம்பெண் நாகம்மாவுக்குரிய ஆதனம், தெற்கு சோமசுந்தரம் பெண் பாறுபதிக்கும் ஆறுமுகம் கந்தையாவுக்குரிய ஆதனம், இதடங்கலும் வடக்கெல்லை காணிக்குளிருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரிததும்,

S. சங்கரப்பிள்ளை J. P.

கொமிஷனர், விலைமதிப்பாளர்

'வேல்பதி" புத்தூர்

27-6-71 எம். 145 9-7

---

# வெளிவந்துவிட்டன.

## அரிய தமிழ் நூல்கள்

1. உண்மை விளக்கம்: — உமாபதிசிவாசாரியர் இயற்றியது. மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்று. திருவாவடுதுறை ஆதீன வித்துவான், சித்தாந்த கலைச்செல்வர் உயர்திரு. க. வச்சிரவேல்முதலியார் B. A., L T. அவர்கள் எழுதிய தெளிவுரையும், உயர்திரு J. M. நல்லாசாமிப் பிள்ளை, B. A., B. L. எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. விலை ரூபா 1-50
2. தாமோதரம் — இராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை B. A., B. L. தாம் பதிப்பித்த இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் முதலாய பல தமிழ் நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு; பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் கொண்டது. விலை ரூபா 4-00

வெளியிட்டோர்:

**யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்**

411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

### கோட்டு கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 10589

1. மாணிக்கம் குகதாசா 2 வேலுப்பர் மாணிக்கம் கைம்பெண் ஆச்சிப்பிள்ளை, புலோலி மேற்கு —வழககாளிகள்

எதிராக

M- சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி, அல்வாய்வடக்கு,—எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விவரிக்கப்படுமாதனத்தை 1971-ஆம் ஆ புரட்டாதி மீ 1-ம் திகதி (1—9—71) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலி கோவிற்பற்று அல்வாய் மாப்பாண குறிச்சி 'ஆலடி மணல்' நி பா. 58, 3/8 இதில் ஆட்சிப்படி நி. பா. 10 (பத்துக்கு) எல்லை கிழக்கு ஆறுமுகம் ஆள்வாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு கதிரித்தம்பியார் சரவணமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு வெற்றிவேலு பெண் கற்பகத்துக்குடைய ஆதனம், தெற்கு கதிரித்தம்பி தம்பிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைக் குட்பட்டவைகளின் சொரிபலாய் அரைவாசியில் 2/5 பங்கும், மேற்கு. தென் மேற்கு; வடமேற்குத் திசைகளில் உள்ள மூலை கிணறுகளில் அரைவாசியில் 2/5 பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புருத்தும் புதிதாக வெட்டப்பட்ட கிணற்றிலும் அரைவாசியில் 2/5 பங்கும்.

மதிப்பிட்ட விலை ரூபாய் 1600/-

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | | 1437 00 |
| வட்டி ரூபா 1000/-க்கு 12 வீத வட்டி | 10—8—69 தொடக்கம் 26—11—69 வரை | 35 00 |
| வட்டி ரூபா 1472/-க்கு 5 வீத வட்டி | 27—11—69 தொடக்கம் 20—1—71 வரை | 85 86 |
| கோட்டுச் செலவு | | 204 52 |
| | | 1762 38 |

இன்னும் 20—1—71 தொடக்கம் ரூபா 1472/-க்கு விற்பனவு திகதி வரையும் 5 வீத வட்டியும்

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை.
26-6-71

கா. முத்துக்குமாரு ஐயர்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
எம். 130 2—7

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

கோப்பாய் தெற்கு. 1. பொன்னம்பலம் சோமசுந்தரமும் பெண் 2. செல்வராணியும் —வழக்காளிகள்

வழ இல: M B 11691 எதிராக

டச்சு றோட்டு, உடுவில். 1. வேலுப்பிள்ளை இரத்தினசிங்கமும் 2. பெண் மகேஸ்வரியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 11691-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விவரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1971-ம்௵ ஆவணி மீ 18-ம் உ (18-8-71) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாங் காணியும் முற்பகல் 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4104/-ம் 14-5-70 தொடக்கம் 5-10-70 வரைக்கும் ரூபாய் 3800/-க்கு 12% வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 400-80 சதம்

**ஆதன விபரம**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று உடுவில் 'அம்புலியன் புலம்' ப கில. இலா. 5 குளி 7½ கிணறுடன் இதற்கெல்லை கிழக்கு வழககாளியின் ஆதனம், வடக்கு கன்னித்தம்பி, பெண் அன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம, மேற்கு பொன்னையா தர்மரெத்தினத்தினுதனம், தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் ஷை கிணற்றில் மேற்கெல்லையிலிருக்கும் காணிக்குரிய தண்ணீர் பங்கு புற நீங்கலாக.

2. ஷை யூர் வச்சியன்தாழ்வு பர. கில. இலா. 3 குளி 3 வீடு, செய்பயிர் வான்பயிர்கள் கிணறுடன் இதற்கெல்லை கிழக்கு: ஒழுங்கை, வடக்கு றோட்டு, மேற்கு சண்முகநாதன் பெண் ராசமணியினுதனம், தெற்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னத்தங்கச்சிப்பிள்ளையினுதனம் இதடங்கலும்.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
22—6—71

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 138 9—7—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 9717 D. C. J.
மூத்தையா கந்தையா
கரம்பன், ஊர்காவற்றுறை
—வழக்காளி

எதிராக

1. ஏரம்பு கார்த்திகேசு
2. மனைவி பராசக்தி இருவரும் மண்டைதீவு, தில்லையம்பலம் ஆறுமுகம், காரைநகர்கிழக்கு
Disclosed Party

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 9717-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஞூ ஆவணிமீ 25-ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக் குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 3770/– 1—2—68 தொடக்கம் 5—6—69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 462/–

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனை இறை இலந்தைககுள வயலும் மேடும் செ. பர. 9 (ஒன்பது) குளி 3. 1/6 (மூன்றும் ஆறில்ஒரு குளியும்) எல்லை கிழக்கு வைரமுத்து பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு ரோட்டு மேற்கு அன்னலிங்கம் பெண் இராசம்மாவின் ஆதனம், தெற்கு ஆறுமுகம் பெண் இராசம்மாவின் ஆதனம், பதிவு யாழ்ப்பாணம் O 292/118

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
'வேல் பதி'
புத்தூர். 24-6-71 144- 9—7-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11578

1. செல்லப்பா பாலசிங்கமும்
2. பெண் ஞானலோசனி இருவரும், பலாலி ரோட், திண்ணவேலி, யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

சரவணமுத்து பொன்னம்பலம் டேவிட் ரோட், சண்டிக்குளி யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11578ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1971-ம் ஞூ ஆகஸ்ட் 19-ஆம் திகதி (19-8-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக் குள் நின்று பிரசித்த ஏலத் தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை; ரூபா 16833 இதில் 500 ரூபா குறைவு பின் 31-5-70 தொடக்கம் 17-11-70 வரை ரூபா 10,000/-க்கு 12வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபம் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 648-05 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்குப் பகுதி 'பரந்தன்புளியடி' பர. கி. 1ம், 1/8 கல்வீடும், கிணறும் செய்பயிர்களும், எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு செகுமாடார் லேபெ அல்லாப் பிச்சைக்கும் பெண் முத்தம்மாவுக்கும் மேற்கு வாப்பாசபிப் சாசமுகமெட்டுக்குரிய ஆதனம், தெற்கு கல்தான் அப்துல்காதர் பெண் மீராமுகைதீன் நாச்சியாக்குரிய ஆதனம், இதடங்கலும்

சி. செ மாரிமுத்து
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
விதானே வளவு 16-6-71
சித்தங்கேணி எம். 141 9-7-71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்
வட்டுக்கோட்டை மேற்கு, கணபதியர் சின்னத்துரை
வழ: இல. M B 10766 எதிராக —வழக்காளி
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை செல்லத்துரை தர்மரெத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 10766-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி (25-7-71) ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2735/- இன்னும் ரூபாய் 2000/-த்துக்கு 19—4—69 தொடக்கம் 2—4—70 வரைக்கும் 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 256-70 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பிரிவு வட்டுக்கோட்டை கோவிற்பற்று அராலி கிழக்கிறை "செட்டிகிலாவலை" பர. கி. இலா. 5 — 0 செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு குமாரசாமி தம்பையாவுக்கும் வைத்திலிங்கத்தினுரிமையாளருக்குமுரிய ஆதனம், வடக்கு சிதம்பரப்பிள்ளை வைரமுத்துவுக்கும், வைரமுத்து விசுவலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள், மேற்கு குழந்தைவேலு கைம்பெண் தில்லைமுத்துவிற்கும் சின்னத்துரை செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு குலத்துங்கபிள்ளை குமாரசூரியருக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

133 பருத்தித்துறை ரோட்டு, செ. விசாகரெத்தினம்.
கல்லூர், யாழ்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
1—7—71 எம். 142 9-7-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் வழ: இல. M. B 11726
ஆவரங்கால் 1. வைரவன் ஐயாத்துரை —வழக்காளி
எதிராக
ஆவரங்கால் தவசி வல்லிபுரம் அவரது பாரியார் வைரியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11726-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி (29-7-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1399-ம் 31-5-70 தொடக்கம் 31-10-70 வரைக்கும் ரூபா 750 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் இறுக்கும்வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 332-90 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று ஆவரங்கால்இறை 'சந்தியன் கலட்டி' நிலப்பரப்பு 3. எல்லை கிழக்கு குழந்தையன் நாகனும் மற்றைய உருத்தாளர்களும் எல்லை வடக்கும் மேற்கும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் ஆதனம். எல்லை தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

வடிவேல் உதயம்" சி. ஆ. த. வடிவேலு, J. P.
காங்கேசன்துறை வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில், ஏலவிற்பனையாளரும்:
1-7-71 எம். 147 9—7—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 11580
சுப்பிரமணியம் அம்பலவாணர் வட்டுக்கோட்டை - மேற்கு
எதிராக —வழக்காளி
(1) முத்துக்குமாரு கந்தசாமியும் பெண்
(2) லீலாவதி இருவரும் — மூளாய் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11580-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1971-ம் ஆண்டு ஆவணி மாசம் 16-ம் திகதி (16-8-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா: 8534/-ம் 20-3-70 தொடக்கம் 10-9-70 வரைக்கும் ரூபா 6,000/- க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 424-50 சதம்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கிழக்கு இறை "துணைவி" நிலப்பரப்பு 4½ நாலரையும் கல்வீடும் தலைவாசலும் குளியும் கிணறும் செய் பயிர் வான் பயிர்களும் கொண்ட ஆதனம். எல்லை கிழக்கு வடக்கு மேற்கு ஒழுங்கை. தெற்கு ஆறுமுகம் பொன்னம்பலத்தின் உரிமைக்காரருக்குரியவாதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

(2) 'ஷை' வட்டுக்கோட்டை கிழக்கு இறை 'கல்வயல்' நெல் பரப்பு 20, 7/8 எல்லை கிழக்கு கணபதிப்பர் இராமலிங்கத்துக்கும் P. வேலுப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு பொன்னம்பலம் பரமானந்தபிள்ளையின் ஆதனம். மேற்கு அம்பலவாணரின் கைம்பெண் தெய்வானையின் ஆதனம். தெற்கு இராசரத்தினத்தின் பெண் பாக்கியத்தின் உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை. 3-7-71 எம். 146 9-7-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 9—7—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 11002
வேலணை மேற்கைச் சேர்ந்த
1. வேலுப்பிள்ளை இராமநாதனும் மனைவி
2. சீதையும் —வழக்காளிகள்
எதிராக
வேலணை மேற்கைச் சேர்ந்த
1. கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கமும்
2 தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளையும் மனைவி
3. ரோசம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 11002-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1971-ம் ஆ ஆவணிமாதம் 19-ம் திகதி (19-8-71) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3861/–ம், 30-7-69 தொடக்கம் 16-12-70 வரைக்கும் ரூபாய் 1950/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 322 சதம் 92

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தீவுப்பற்றுப் பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை மேற்கு இறை 'மயிலன்பகுதி' பர. வி. இலா. 12ம் வேம்பும், எல்லைகள்:
கிழக்கு: சுப்பையா முத்தையாவினுடையதும், பங்காளர்கள் வைத்தியநாதர் வல்லிபுரத்தினுடையதும் மனைவி பூரணத்தினுடையதும், சோமசேகரம் சொர்ணலிங்கத்தினுடைய ஆதனங்கள், வடக்கு: த சண்முகநாதன் மனைவி திலகவதியினுடைய ஆதனம், மேற்கும், தெற்கும் ஒழுங்கை, இதடங்கலும்.
2. ஷை வேலணை மேற்கு இறை "கொட்டிப்பிரிவு" பர. செ இலா. 4ம், பனைகளும், வடலிகளும், எல்லைகள்:-
கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: கணபதிப்பிள்ளை பெண் இராசம்மாவினுடைய ஆதனம். மேற்கு: வல்லிபுரம் பெண் பூரணத்தினுடைய ஆதனம், தெற்கு: பொன்னம்பலம் கனகரத்தினத்தின் ஆதனம், இதடங்கலும்.

107, பெரியதெரு, எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
3—7—71 எம். 140 9-7-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்
வழ: இல. M. B. 7586
சுளிபுரம் நாராணபிள்ளை பேரம்பலம் —வழக்காளி
எதிராக
சங்கானை 1. கார்த்திகேசு நாகரத்தினமும் பெண்
இழக்கு, 2. சிவபாக்கியமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 7586-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணியை 1971-ம் ஞூ ஆவணி மீ 5-ம் திகதி (5-8-71) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 2000/-ம், 30-7-65 தொடக்கம் 29--1—69 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைகக்கும் பணம் முற்றாக இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 297-25 சதமும் இவற்றில் ரூபாய் 2000/- கட்டப்பட்டுளளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானைகிழக்கு இறை 'சாயுடை' (Chaudai) கி. பர. 8 கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு வல்லிபுரம் செல்லையாவுக்கும் அம்பலவாணசுவாமி கோயிலுக்குமுரிய ஆதனம், மேற்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயிலாதனம், தெற்கு பொன்னுத்துரை பெண் இராசம்மாவின் ஆதனம். இதடங்கலும் E 267/67ல் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் கந்தோரில் பதியப்பட்டது.

மல்லாகம். செ. பாண்டித்துரை
17-6-71 கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம், 112-28-6 Commissineer of Sales & Values

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் வழ: இல M B. 11657
1. சுப்பிரமணியம் பொன்மயிலை நாதனும் மனைவி
2. புவனேஸ்வரியும் மயிலிட்டி வடக்கு — வழக்காளி.
குட்டியன் கைம்பெண் குழந்தை, மயிலிட்டி வடக்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11657 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஆண்டு ஆவணி மாசம் 25-ம் திகதி [25—8-71] புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: – முதல் வட்டி ரூபா 5143-00 ம் 3-5-70 தொடக்கம் 15-11-70 வரைக்கும் ரூபா 3000-00 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 469-49 ம் அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு மயிலிட்டி கோவிற்பற்று மூலவை மயிலிட்டி இறை கலுவாலத்தை நிலப்பரப்பு 6 கிணறும் பனைகளும் தென்னை மரங்களும். இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு வள்ளி பொன்னுக்கும் வயிரவன் மாணிக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு விசுவர் வயிரவிப்பிள்ளைக்கு உரிய ஆதனம். தெற்கு வள்ளி கைம்பெண் வயிரியின் ஆதனம். முன் சொல்லப்பட்ட கிணற்றிலும் தூரவையிலும் இதைச் சேர்ந்தவைகளிலும் கிழக்கு எல்லைப் பக்கமாகப் போகும் வழி வாய்க்காலிலும் தெற்கு எல்லைக் காணிக்கு உரிய ½ பங்கு பிற நீங்கலாகவும்.

கா. தர்மலிங்கம்
உரும்பிராய் கொமிசனரும், விலைமதிப்பாளரும்
2-7-71 எம், 148 9-7-71.